**அக்டோபர் - 9**

**"அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்." - மத் 8:26.**

ஒவ்வொரு அனுபவமும் நமக்கு உதவுகிறதாக இருக்க வேண்டும். முதலில் நாம் பயப்பட்டு கூக்குரலிட்டிருந்தாலும், ஒருவேளை, "அற்பவிசுவாசிகளே என்கிற கண்டனத்தைப் பெற்று, சீக்கிரத்தில் நாம் ஒத்தாசை பெற்றோம். ஆனால் அடுத்தடுத்து படிப்பினை நமக்கு வந்திருக்கிறதினால், போதகர் எதிர்பார்ப்பதும், நாமே நம்மிடம் எதிர்பார்ப்பதும் என்னவென்றால், முன்னைவிட அதிக விசுவாசமும், நம்பிக்கையும், சமாதானமும், சந்தோஷமும், நம்மோடு அவர் இருக்கிறதிலும், நம்மேல் அவருக்கிருக்கிற கவலையிலும், எதிராளியிடமிருந்தும், ஒவ்வொரு தீமையான காரியத்திலிருந்தும், நம்மை விடுதலை செய்து முடிவாக நாம் நாடும் துறைமுகத்திற்கு பரமராஜ்யத்திற்குப் பத்திரமாக நம்மைக் கொண்டு சேர்ப்பதில் அவருக்கிருக்கிற வல்லமையிலும், முன்னைவிட நமக்கிருக்க வேண்டிய அதிக நம்பிக்கையுமேயாகும். **- Z ’04, 60 (R 3324)**

இப்பொழுதிருக்கிற தீமையான நிலைமைகளின் கடலிலே கிறிஸ்தவ மாலுமி யாத்திரை செய்யும் பொழுது, அவன் சந்திக்கிற புயல்கள் சில வேளைகளில் அவனுடைய விசுவாசக் கப்பலை அநேகமாகக் கவிழ்க்கக் காரணமாகின்றன. மற்ற வேளைகளில், துயரத்தின் தண்ணீரால் கப்பலை நிரப்பி, இவ்விதமாக, தண்ணீர்மேல் மிதந்து செல்லுவதை ஆபத்துக்குள்ளாக்க அவைகள் காரணமாகின்றன. கிட்டத்தட்ட எப்பொழுதும் தங்களுடைய தாக்குதலினால், அதை முன்னும் பின்னும் தள்ளக் காரணமாகின்றன. காற்றுக்கும் அலைக்கும் கட்டளையிடுகிற கர்த்தர் இப்படிப்பட்ட புயல்களில் நமது பாதுகாவலராக நமது பக்கத்திலேயே இருக்கிறார் என்பதை மறந்து போகாமல் இருப்போமாக. இந்த எண்ணம், நமது விசுவாசக் கப்பல் அமிழ்ந்து போகுமோ என்ற பயத்திலிருந்து நமது இருதயங்களை விடுவிக்கும். "இரையாதே அமைதலாயிரு" என்ற அவருடைய அதட்டலுக்குக் கீழ்ப்படிந்த கலிலேயா கடலின் புயலைப்போல, நமது உபத்திரவத்தின் கடும் புயல்களும் பூரண அமைதியில் அடங்கும். இதை அறிந்து நாம் பயப்படாமலும், விசுவாசத்தில் குறையாமலும் இருப்போமாக. ஏனென்றால், அவர் நம்மோடிருக்கிறார். **- P ’30, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 31:22; 42:5,6; 77:7-9; ஏசா 49:14,15; மத் 6:30; 14:29-31; 17:17; மாற் 4:38-40;5:36; லூக் 8:23-25; 17:5; யோவா 14:1; கலா 6:12; பிலி 4:6,7; 2தீமோ 4:16,17; 1யோவா 5:4.**

**கோபுர வாசிப்பு : : Z ’13, 60 (R 5188).**

**வினாக்கள் : நான் அற்ப விசுவாசமுள்ளவனாயிருந்தேனா? அதற்கு சந்தர்ப்பமளித்தது எது? நான் அதை எவ்வாறு மேற்கொண்டேன்?**